


- வாழ்வோம்

பெரியார் அறிவுலகம், கோவையின் புதிய அடையாளமாக உருவாகியுள்ள நிலையில், 'டிஜிட்டல் யுகத்தில் நூலகமெல்லாம் எதற்கு, என ஒரு கும்பல் பேசத் தொடங்கியுள்ளது. இதற்குப் பதிலடியாக எக்ஸ் தளத்தில், சண்முகம் சின்னராஜ் என்பவர் எழுதியுள்ள பதிவு, கவனிக்கவைக்கிறது. அதில்...

`டெக்னாலஜி எவ்வளவோ டெவலப் ஆகிடுச்சு. ஈ-புக் வந்துடுச்சு. ஆன்லைன்ல பழைய புக்ஸ் கூட பி.டி.எஃப் பார்மேட்ல கிடைக்குது... பல பேர் வீட்டு மொட்டை மாடியிலகூட உட்கார்ந்து குரூப் எக்ஸாமுக்கு படிச்சுக்கறாங்க.... எதுக்கு தெண்டமா ரூ.300 கோடியில பெரியார் அறிவுலகம்னு லைப்ரரி கட்டி பணத்தை வேஸ்ட் பண்ணிட்டு' என தி.மு.க. ஒவ்வாமை கொண்ட தற்கோழிகள் மெல்ல மெல்ல எழுதுகின்றன.

ஒவ்வாமை கொண்டோரின் ஒப்பாரிகள்!

ஏன், பௌர்ணமியில் நிலா முழுதாகத் தெரிகிறது.. ஏன் அமாவாசையில் நிலா தெரிவதில்லை.. என்ற கேள்விக்குப் பள்ளியிலோ, வீட்டிலோ, ஏட்டுப் புத்தகங்களை வைத்து மாணவர்களுக்குப் பயிற்றுவிப்பதைவிட, ஒரு ஆய்வரங்கத்தில் நேரே சென்று, கோள வடிவில் பூமியை, சூரியனை, நிலவைக் கண்டு உணர்வது, பல மடங்கு கற்றல் திறனை ஊக்குவிக்கும்.

படிக்க, நேரடியாகக் கண்டு உணர என இரு வாய்ப்புக்குமான வசதியை ஓர் அரசு தருகிறது எனில், கட்சி வேறுபாடின்றி அதைப் பாராட்ட வேண்டும்; இல்லையென்றால், அமைதியாக இருக்க வேண்டும்!

இன்னொன்று.. ஆன்லைனில் படிப்பது என்பது டைவர்சனை மடியில் கட்டிக்கொண்டு இம்சிக்கிற வேலை... ஒரு குறுஞ்செய்தியோ, ஒரு விளம்பரமோ, ஒரு அலைபேசி அழைப்போ, எது வேண்டுமானாலும் படிப்பதைத் திசைதிருப்பும். ஆனால், புத்தகத்தை நாமே கீழே வைத்தால் ஒழிய, டைவர்சனுக்கு வாய்ப்பில்லை.

`துக்ளக்' சோ ஒரு மேடையில் இப்படித்தான் பேசினார்: "என்னால எதுவும் சிறப்பா செய்ய முடியலன்னா... அடுத்தவன் சிறப்பா செஞ்சதைக் கிண்டல் பண்ணிடுவேன்! எனக்குத் தெரிந்த ஒரே வேலை அதுதான்!"

ஒரு சமூகத்துக்கான வாக்குமூலமாக இருந்த அந்தப் பேச்சை, த.வெ.க.வினர் மூலமந்திரமாக எடுத்துக்கொண்டதில் எனக்கு எந்த வியப்பும் இல்லை. ஏனென்றால், கல்வியோடு சம்பந்தம் இருக்கிற, ஆனால் அறிவோடு சம்பந்தம் இல்லாத ஒரு தலைமுறைதான் நம்மோடு உழன்றுகொண்டிருக்கிறது.

மல்லுக்கட்டி யாராவது புத்தகத் திருவிழாவுக்குக் கூட்டிப்போனாலும், அங்கே `டெல்லி அப்பளம்' தேடுகிற தற்கோழிகளிடம் நீங்கள் வேறென்ன எதிர்பார்க்க முடியும்?" என்று குறிப்பிட்டுள்ளார்.

ஃப்ளாஷ்பேக்



அண்ணா அளித்த பாராட்டு மடல்!



து.கோவிந்தசாமி

1959-ஆம் ஆண்டு, சென்னை மாவட்டக் கழகத்தின் 3-வது மாநாட்டில் தொண்டராகப் பணியாற்றியபோது, மாவட்டக் கழக நிர்வாகிகள், பேரறிஞர் அண்ணாவுடன் குழுவாக எடுத்துக்கொண்ட புகைப்படம். அந்த மாநாட்டில் தொண்டராகப் பணியாற்றியவர்களுக்கு, பேரறிஞர் அண்ணா அவர்களால் பாராட்டி அளிக்கப்பட்ட பாராட்டுப் பத்திரம். அன்று பொதுச்செயலாளராக இருந்த நாவலர், வரவேற்புக்குழுத் தலைவர் கோ.செங்குட்டுவன், தொண்டர் படைத் தலைவர் தி.சு.நல்லதம்பி ஆகியோரின் கையெழுத்துடன் வழங்கப்பட்ட அந்தப் பாராட்டு மடல், கழக முன்னோடிகள் பலரோடும் இணைந்து பணியாற்றிய அந்தக் காலத்தைக் கண்முன் நிறுத்தும். இன்று 96 வயதிலும் 'முரசொலி' வாசிப்பதைக் கழகக் கடமையாகவே கொண்டுள்ளேன்.

- து.கோவிந்தசாமி, 1-வது வட்ட முன்னாள் செயலாளர், தண்டையார்பேட்டை, சென்னை.

இதுபோன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள்.
அலைபேசி எண் அவசியம். அனுப்பவேண்டிய முகவரி: அன்பகம், 614,
அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018
வாட்ஸ்அப் எண்: 82204-51520 மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

அறிவுவெளிச்சம் பாய்ச்சியவர், அண்ணா!



குடும்ப உறவு முறைகள் மீதான இளைய தலைமுறையின் பார்வை, வளர்ந்த மற்றும் வளரும் நாடுகளில் பெருமளவு மாறிவருகிறது. திருமணம் - குடும்ப வாழ்க்கை - வாரிசு என்பதையெல்லாம் பெரும் சுமையாகப் பார்க்கும் மனநிலையில், சுமார் 30 சதவிகித இளைஞர்கள் இருப்பதாக ஐக்கிய நாடுகளின் மக்கள்தொகை நிதிய ஆய்வுகள் கூறுகின்றன.

குறிப்பாக, இன்றையக் காலகட்டத்தில் திருமணச் செலவுகள், வீடு வாங்குவது மற்றும் குழந்தை வளர்ப்புக்கான செலவுகள் மிகவும் அதிகமாக இருப்பதால், அதில் இருந்து விலகி நிற்கவே இளைஞர்கள் எண்ணுகிறார்கள். திருமணத்திற்குப் பிறகு தங்களின் சுதந்திரம், தனியுரிமை மற்றும் சுய விருப்பங்கள் பறிபோய்விடும் என்கிற எண்ணங்களும் உருவாகத் தொடங்கியிருக்கின்றன. அதனால், குடும்ப வாழ்வியலில் இருந்து விலகி, தங்களுக்குப் பிடித்த இடங்களுக்குப் பயணம் செய்வதும், பொழுதுபோக்குகள் மற்றும் சுய முன்னேற்றத்திற்கு முன்னுரிமை அளிக்க விரும்புவதும்தான் இன்றைய GEN Z தலைமுறையின் விருப்பமாக இருக்கிறது.

அப்படிப்பட்ட இந்த நவீனகாலச் சூழலிலும்கூட, தமிழ்ச் சமூகத்தில் திருமணமும் வாரிசு கட்டாயம் வேண்டுமென்ற பிற்போக்குத்தனங்களும் சமூகத்தில் மிக ஆழமாக வேர்விட்டிருக்கின்றன. குழந்தை இல்லாத தம்பதிகளை இச்சமூகம் எதிர்கொள்ளும் விதமே, இன்றும் மோசமான நிலையில்தான் உள்ளது. ஒரு மாதத்திற்கு முன்புகூட, செப்டம்பர் 28 அன்று கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரையில், புகழரசன் - அஷ்வினி என்ற தம்பதி, தங்களுக்குக் குழந்தை இல்லை எனக்கூறி தற்கொலைக்கு முயன்றனர். புகழரசனுக்கு வயது 26, அஷ்வினிக்கு வயது 22. திருமணமாகி இரண்டே ஆண்டுகளில் அவர்கள் தற்கொலைக்கு முயன்றார்கள் என்றால், அவர்களுக்கு இச்சமூகம் கொடுத்த அழுத்தம் எத்தகைய கொடூரமானது என்பதை எண்ணிப்பார்க்கவே அச்சம் ஏற்படுகிறது.

இந்தக் கொடூரங்கள் ஒருபக்கம் என்றால், குழந்தையின்மையின் பெயரால் சமூகத்தில் விதைக்கப்படும் மூடத்தனங்கள் இன்னொரு பக்கம். 'குழந்தை வரம் வேண்டி செல்லவேண்டிய கோயில்கள்' என டாப் 10 சினிமா பட்டியல் போல கோயில்களின் பட்டியலை யூடியூப் முதல் இன்ஸ்டாகிராம் வரை குவித்து வைத்திருக்கிறார்கள். எந்தக் கோயிலுக்குச் சென்று என்ன பரிகாரம் செய்ய வேண்டும், என்ன விரதம் இருக்க வேண்டும், எந்தக் குளத்தில் எப்படி நீராட வேண்டும் என விதவிதமான டிப்ஸ்களை அள்ளிக் கொட்டுகிறார்கள். பத்திரிகைகளும் தன் பங்குக்கு ராசிபலன் போல இதற்கும் அவ்வப்போது தனிக்கட்டம் போட்டு செய்தி வெளியிடுகிறார்கள்.

2026-லேயே இதுதான் நிலைமை என்றால், நூறாண்டுகளுக்கு முன்பு இருந்த நிலையைப் பற்றி சொல்லவா வேண்டும்? அன்றைய காலச்சூழலைப் புரிந்து கொள்ளும் வகையிலும், இத்தகைய பிற்போக்குத் தனங்களில் இருந்து சமூகம் விடுபட வேண்டுமென்று வலியுறுத்தும் வகையிலும் பேரறிஞர் அண்ணா எழுதிய நாடகம் தான், 'ஆற்றங்கரையிலே'.

'காலன்' என்ற புனைபெயரில் அண்ணா எழுதிய இந்த நாடகம், 17.06.1945 அன்று, 'திராவிட நாடு' இதழில் வெளியாகி இருக்கிறது. அகிலா, புவனா என்ற இரண்டு பார்ப்பனப் பெண்கள் உரையாடுவது போல எழுதப்பட்ட இந்த நாடகம், முற்போக்கு எண்ணங்களை, சமூகத்தில் மிக அழகாக விதைத்துள்ளது.

ஆற்றங்கரையில் அகிலாவைச் சந்திக்கும் புவனா, 'திருமணம் முடிந்து 5 ஆண்டுகள் ஆகியும் குழந்தை பாக்கியம் இல்லையே' என்று வருந்துகிறார். ஜோசியர் சுப்பிரமண்ய ஐயர் கூறிய அறிவுரைப்படி, திருமுட்டம் (ஸ்ரீமுஷ்ணம்) சென்று நித்யபுஷ்கரணி குளத்தில் நீராடி, அங்குள்ள அரச மரத்தைச் சுற்றிவந்து, பூவராக சுவாமியை வழிபடப் போவதாகக் கூறுகிறார். இதைக் கேட்கும் அகிலா, பகுத்தறிவு பரவிவரும் 20-ஆம் நூற்றாண்டிலும் இத்தகைய மூடநம்பிக்கைகளை நம்புவதைக் கேலிசெய்கிறார். இருவருக்கும் இடையிலான சுவாரஸ்யமான உரையாடல், சமூகத்தில் புரையோடிக்கிடக்கும் பிற்போக்குத்தனங்களைக் கடுமையாகச் சாடுகிறது.

05

பேரறிஞர் பேனா

பகுத்தறிவு பரவிவரும் 20-ஆம் நூற்றாண்டிலும் இத்தகைய மூடநம்பிக்கைகளை நம்புவதைக் கேலிசெய்கிறார். இருவருக்கும் இடையிலான சுவாரஸ்யமான உரையாடல், சமூகத்தில் புரையோடிக் கிடக்கும் பிற்போக்குத் தனங்களைக் கடுமையாகச் சாடுகிறது.

'புவனா: எங்காத்துக்காரர் கிட்டே ஜோஸ்யர் சுப்பிரமண்ய ஐயர் திருமுட்டம் போய் புஷ்கரணியில் ஸ்நானம் பண்ணி, அஸ்வத்த நாராயண ஸ்வாமி கோயிலில் இருக்கும் அரசமரத்தைச் சுத்தினா சந்ததி உண்டாகும்னு சொன்னாராம். அடுத்த சோமவார அமாவாசைக்குத் தான் திருமுட்டம் போய் அரசமரம் சுத்திட்டு, அப்படியே பூவராக ஸ்வாமியையும் சேவிச்சுண்டு வரலாம்னு இருக்கேன், அவன் செயல் எப்படினோ?

அகிலா: அடி அசடே, வர வர சுத்த பைத்தியமா போயிட்டியே! பகுத்தறிவுச் சுடர் விட்டெரியும் இந்த 20-ஆம் நூற்றாண்டில்கூட நீ இதை நம்புறியே. நம்ம பெரியவாளெல்லாம், நம்ம சந்ததியும் நாமும் சுகமா சாப்பிட்டுண்டு இருக்கச் செய்த ஏற்பாடுகளிலே இதுவும் ஒண்ணுன்னு தெரிஞ்சுக்காம இருக்கியே! அந்த அரசமரங்கூட பட்டுப்போயிடுத்துடி, வேர்தாண்டி இருக்கு. இந்த வேரச் சுத்தினா பிள்ளை வரும்னு நம்பி, இந்த சூத்ரப்பயல்கள்தாண்டி சுத்துவா. அந்த வேரைச் சுற்றும் கருமிப் பயல்கள் கொடுக்கும் தட்சணையைக் கொண்டு தாண்டி அந்த ஊரில் சுமார் 70 மாத்வ பிராமணா சுகமா சாப்டுண்டிருக்கா.

புவனா: என்னக்கா இப்படிச் சொல்றே. ஆயிரக்கணக்கான மனுஷா பணக்காரரெல்லாம் கத்துறாளே, அவங்க அத்தனை பேருக்குமா அறிவில்லேன்னு சொல்றே!

அகிலா: அதுக்கென்னடி சந்தேகம், பட்டுப்போன வேரைச் சுத்திட்டு சும்மா இருந்தாளானா புள்ளே பொறந்துடுமாடி? அதச்சுத்தாமலே எத்தனையோ கோடி முஸ்லிம்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும், ஆதிதிராவிடர்களுக்கும் பிள்ளைகள் பொறக்கலையாடி?' என இருவருக்குமான அந்த உரையாடல் தொடரும்.

நித்ய புஷ்கரணி தீர்த்தம், அரசமர வலம், பூவராக சுவாமி என்ற சமஸ்கிருதப் பெயரின் தமிழ் அர்த்தம் என மிகக் கடுமையாக அண்ணா சாடியிருப்பார். அந்தச் சாடலின் ஊடாக அறிவு வெளிச்சத்தையும், குழந்தையின்மைக்கு இத்தகைய பிற்போக்குத்தனங்கள் தீர்வில்லை என்பதையும் அண்ணா இந்த நாடகத்தின் வழியாக உணர்த்தியிருப்பார்.

...தொடரும்

ர.பிரகாசு

தெரிந்து கொள்வோம்

1928 நீதிக்கட்சி ஆட்சியில், கூட்டுறவுத் துறையில் வகுப்புரிமை செயல்படுத்தப்பட்டது.

1948 'இரணியன்' அல்லது `இணையற்ற வீரன்' நாடகம் தடை - நடிகர்கள் சிறை.

1954 ஆந்திர மாநிலம், சித்தூரில் கழக மாநாடு - சித்தூரை தமிழ்நாட்டில் சேர்க்க, குரல்!

1956 கழகத்தின் இரண்டாவது மாநில மாநாடு - நாவலர் தலைமை.

1957 கழக மகளிர் மன்றம் சார்பாக அண்ணாவிடம் ரூ.1,001 தேர்தல் நிதி.

1968 லக்னோ தாழ்த்தப்பட்டோர் மாநாட்டில் தந்தை பெரியார் முழக்கம்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900